**காலி மாநகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 29 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூலை 03 திகதியும் நகர பிதாவுக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து காலி மாநகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய வியாபார வரி மீதி ரூபா 5,496,321 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 9,066,045 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 3,276,600 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான நிலுவை வியாபார அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 1,986,200 தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,206,196 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடந்த 05 வருடங்களில் முத்திரைக் கட்டண வருமானங்களின் சராசரி தொடர்பாக கவனம் செலுத்தாமல் பாதீடு செய்யப்பட்ட முத்திரைக் கட்டணம் வருமானம் என ரூபா 100,000,000 தொகையினை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மிகை மதிப்பீடாக காணப்பட்டது. | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஊ) | கட்டட விண்ணப்பங்களை அனுமதிக்கும் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 5,830,583 தொகைக்கான முற்தயாரிப்புக் கட்டணத்தை பொறுப்புக்கள் என இனங்கண்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (எ) | மீளாய்வாண்டின் போது முறையான அங்கீகாரம் இன்றி கூட்டுத்தொகை ரூபா 505,667 தொகைக்கான கொடுக்கல் வாங்கல்கள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 1,934,029 தொகைக்கான கொடுக்கல் வாங்கல்கள் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | கொடுக்கல் வாங்கல்களுக்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஐ) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்புத் தொகை ரூபா 103,673,560 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 33,284,580 தொகைக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் தொடர்பாக தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | சரியான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். | முத்திரைக் கட்டணத்தின் பாதீட்டுத்தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 17,985,748 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2003 ஆண்டு முதல் காணப்பட்ட ரூபா 111,553 ற்கான தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கு மீதி தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெறவேண்டிய கணக்கு** | | |
| (i) முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 561,721,172 தொகைக்கான கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 648,308,725 தொகை வரை அதிகரித்திருந்ததுடன், அவை மொத்த சொத்துக்களில் 45 சதவீத அளவிலான பாரிய பெறுமதியைக் கொண்டிருந்தது. | பெறவேண்டிய கணக்குகள் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன் என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 14 கணக்கு விடயங்களை சேர்ந்த கூட்டுத்தொகை ரூபா 46,382,556 தொகைக்கான மீதி பல வருட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காணப்பட்டிருந்ததுடன், அம்மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்ச்சியாக காணப்படும் கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன் என அறிவிக்கின்றேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 135,931,579 தொகைக்கான பொது வழங்கல் கடன்கொடுத்தோர் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 139,134,883 தொகை வரை அதிகரித்திருந்தது. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன் என அறிவிக்கின்றேன். |

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 475,086,428 தொகைக்கான 06 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 68,386,691 தொகைக்கான இருப்பு மீதியை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு தகவல்கள் காணப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(ஈ) | அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் இருந்து வரி அறவிடப்படாதிருந்ததுடன், அவ்வாறான காணிகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டின் போது குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுப்பேன். |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 141,182,555 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 178,438,560 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் இரண்டு வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 239,996 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீண்ட காலமாக காணப்படும் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | ரூபா 518,317 தொகைக்கான பெறுமதியுடைய மதிப்பளிக்கபடாத காசோலை மீதியில் அடங்கியுள்ள ரூபா 55,474 தொகை பெறுமதியான காசோலை தொடர்பான தகவல்கள் சபையில் காணப்படாததுடன், ஒரு வருடத்தை | தகவல்களை பெற்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன் என அறிவிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| | விட மிகையான காலம் முதல் காணப்பட்டு வரும் ரூபா 209,128 தொகை பெறுமதியான 16 மதிப்பளிக்கப்படாத காசோலைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |
| (இ) | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள ரூபா 295,482 தொகை பெறுமதியான 62 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். எதிர்காலத்தில் சரி செய்வேன் என அறிவிக்கின்றேன். |

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 111,510,000 | 87,666,373 | 92,705,195 | 145,408,000 | 111,510,000 | 106,365,583 | 105,113,546 | 142,355,829 |
| வாடகை | 105,582,275 | 39,000,691 | 55,839,507 | 44,589,860 | 105,582,275 | 48,236,132 | 42,975,003 | 26,184,809 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 42,104,000 | 7,412,560 | 31,949,557 | 7,386,142 | 42,104,000 | 37,150,353 | 36,326,845 | 9,468,570 |
| ஏனைய வரு மானங்கள் | 158,007,000 | 131,791,628 | 133,666,570 | 450,924,723 | 158,007,000 | 170,068,921 | 84,220,934 | 8,237,753 |
| | 417,203,275 | 265,871,252 | 314,160,829 | 648,308,725 | 417,203,275 | 361,820,989 | 268,636,328 | 186,246,961 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 06 ஆதனங்களுக்காக மீளாய்வாண்டின் போது சிட்டையிடப்பட்ட தரை வாடகை மற்றும் விளைச்சல் வரி பெறுமதி ரூபா 7,434,630 தொகையாகும். சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 15,017,368 தொகை எனினும் சேகரிக்கப்பட்டிருந்தது ரூபா 3,251,780 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் சேகரிப்பு 22 சதவீதம் ஆக காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 131,869,573 தொகைக்கான நிலுவை வீதவரி மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 135,067,229 தொகை வரை அதிகரித்திருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதுடன், நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சில அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்ச்சியாக வீதவரி செலுத்துவதை புறக்கணித்துள்ளதுடன், அவ்வாறான 147 நிறுவனங்களின் ரூபா 115,714 முதல் ரூபா 2,683,125 வரை வீச்சில் வரிப் புறக்கணித்தல் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நாட்டில் காணப்பட்ட குழப்பச் சூழ்நிலை காரணமாக வரி அறவீடு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப் படவில்லை என அறிவிக்கின்றேன். |

### 2.3.4 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வாடகை ரூபா 26,184,289 தொகை வருட இறுதி அளவில் ரூபா 32,023,215 வரை அதிகரித்திருந்தது. | வாடகை உடன்படிக்கையின் படி நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநாகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக புவியியற் தகவல் முறைமை ஒன்று நிறுவுவதற்காக அணுகியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் அந்தத் தகவல் முறைமை 2013 ஜுலை 02 திகதி தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது.<br>எவ்வாறாயினும், இதற்காக ரூபா 4,081,950 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் குறிப்பிட்ட தகவல் முறைமை தயாரிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து சபையின் கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். | செயற்திட்டம் 2015 ஆண்டின் போது சபைக்கு ஒப்படைக்கப்பட்டது என அறிவிக்கின்றேன். |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள்(Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையின் சேமிப்புக் கணக்கில் காணப்படும் ரூபா 10,204,152 ற்கான தொகை அபிவிருத்தி வேலைகள் எதற்கும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உடன்படிக்கையின் பிரகாரம் 2018 மார்ச் 28 திகதி அல்லது அதற்கு முன்னர் நகர மண்டபத்தின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஏப்ரல் 27 திகதி வரை திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் செயற்படுத்த வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தின் வழிகாட்டல் மற்றும் அறிவுறையின் மீது திட்டங்கள் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

## 3.2 ஒப்பந்த வேலை நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | போபே குறுக்குப்பாதை வடிகால் தயாரிப்பதற்காக ரூபா 1,550,645 தொகைக்காக 2017 திசெம்பர் 29 திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்துடன், 2018 பெப்ரவரி 08 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தக்காரரின் காரணம் ஒன்று மற்றும் வதிவோரின் சிக்கல் காரணமாக செயற்திட்டம் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இடை நிறுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டம் உடன்படிக்கையின் படி பூர்த்தி செய்யப்பட வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை. |
| | நிறைவேற்றப்பட்ட பகுதியில் வடிகால் கொங்கீரிட் பண்ணும் போது மில்லிமீற்றர் 8 அளவான 10 கம்பிகள் போடப்படுவதற்கு பதிலாக 08 கம்பிகள் போடப்பட்ட காரணமாக மதிப்பிடப்பட்ட அளவை விட 87 கிலோ கிராம் கம்பி குறைவாக போடப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் படி கம்பிகள் போடப்பட வேண்டும். | புதிலளித்திருக்கவில்லை. |
| (ஆ) | காலி சரணங்கர பாதையில் பக்கச் சுவர் நிர்மாணிக்கும் வேலையில் வேலை விடய இலக்கம் 05 இன் கீழ் Plywood foam work 16 மில்லி மீற்றர் கனத்தில் காணப்பட வேண்டியிருந்த போதிலும் 12.5 மில்லி மீற்றர் கனத்தில் போடப்பட்டிருந்தமையால் ரூபா 23,439 தொகையும், விடய இலக்க 07 இன் பிரகாரம் ரூபா 88,885 தொகையும் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அதன்படி செயற்பட வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை. |

## 3.3 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலம் தொடர்பான ரூபா 5,980,920 தொகைக்கான கணக்காய்வு கட்டணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் படி வருடாந்த கணக்காய்வுக் கட்டணம் | பதிலளித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | செலுத்தப்பட வேண்டும். | |
| (ஆ) | நகர நிதி திணைக்களம் அமைந்துள்ள கட்டடத்தை திருத்த வேலை மேற்கொள்ளும் வரை செலவுப் பிரிவு வேறு இடம் ஒன்றில் நடாத்துவதற்காக 2018 ஜனவரி 04 திகதி முதல் 2020 பெப்ரவரி 12 திகதி வரை இரண்டு வருடங்களுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி மாதாந்தம் ரூபா 60,000 வீதம் ரூபா 1,440,000 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. 02 வருட காலம் முடிவடைந்திருந்த போதிலும் குறிப்பிட்ட கட்டடத்தை திருத்துவதற்கு அல்லது வேறு இடமொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | கட்டடத்தின் திருத்த வேலை மேற்கொள்வதற்கு வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | குப்பை போடப்படும் காணி தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) சிரேஷ்ட மற்றும் இரண்டாம் மட்ட 04 பதவிகளின் மிகையும் மற்றும் 126 வெற்றிடங்களும் காணப்பட்டன. சேர்க்கப்பட்டிருந்த ஒப்பந்த மற்றும் அமைய ஊழியர்கள் 100 பேரின் சேவையை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களுக்காக முறைப்படி ஆட்சேர்ப்பதற்கும் மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பொது நூலக 06 நியமப் பதவிகளில் 23 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் மற்றும் 02 பதவிகளின் 08 ஊழியர் மிகையும் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக முறைப்படி ஆட்சேர்ப்பதற்கும் மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2018 ஒக்தோபர் 15 திகதிய பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு நகர பொறியியாளர் கடமையிலிருந்த அகற்றப்பட்டிருந்ததுடன், 2020 ஜனவரி மாதம் வரை அவரிடம் சேவை ஒன்றினை பெற்றுக்கொள்ளாமல் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,220,546 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கடமைச் சாட்டுதல் மற்றும் அகற்றுதல் முறையான பரிசோதனை ஒன்று நடாத்தப்பட வேண்டும். | கடமை சாட்டுதல் அல்லது வேறு இடத்திற்கு மாற்றம் செய்தல் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கின்றேன். |

**3.5 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 08 நிறுவனங்கள் மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்தியிருக்காததுடன், மேலும் 06 நிறுவனங்கள் மொத்த பெறுவனவு மீது அறவிடப்பட வேண்டிய 01 சதவீதக் கட்டணம் அறவிடப்படாமையால் ரூபா 1,092,109 ற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. | சுற்றுலா சபையினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து குறிப்பிட்ட கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தியிருக்காத நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.6.1 சொத்துக்கள் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான கலாநிதி ரிட்செட் பத்திரன பொதுசன நூலகம் அமைந்துள்ள கட்டடத்தின் மேல் மாடி கொங்கிரீட் படை (Slab) வெடிப்படைந்து காணப்பட்டதுடன், சில இடங்களில் சுவரும் வெடிப்படைந்து காணப்பட்டது. | சொத்துக்கள் உரிய முறையில் பராமரித்தல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். | பல சந்தர்ப்பங்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது நூலகத்தின் பாதுகாப்பிற்காக ரூபா 562,800 தொகைக்கான 16 பாதுகாப்புக் கமராக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், உத்தரவாத காலம் முடிவடைய முன்னர் ஒரு வருடம் போன்ற குறுகிய காலத்தில், அக் கமரா முறைமை செயற்படாது காணப்பட்டது. | கமரா முறைமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.6.2 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 106 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வேன் என அறிவிக்கின்றேன். |

**3.7 பெறுகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.3(இ) பிரிவுக்கு முரணாக பதிவு செய்யப்பட்டிருக்காத வழங்குனர்களிடம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகைக் கோவையின் பிரிவுகளின் படி கூறுவிலை அழைக்கப்பட வேண்டும். | அத்தியசிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக விரைவாக உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்வதற்கு நேரிடுகின்றது என அறிவிக்கின்றேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், மாதாந்த, காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகள் முகாமைத்துவத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன் என அறிவிக்கின்றேன். |